**தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர்தொகுதி) செயல்முறைகள், சென்னை – 6**

ந.க.எண்.053051/அ4/இ3/2026, **நாள்.** 03.09.2026

*******

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப் பணி – இளநிலை உதவியாளர் / தட்டச்சர்கள் /சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–3 ஆகியோர்களுக்கு உதவியாளராகப் பதவி உயர்வு / பணிமாறுதல் வழங்குவது – **15.03.2026** நிலவரப்படி தகுதிவாய்ந்தோர் விவரம் கோருதல் – தொடர்பாக.

பார்வை:

1. அரசாணை (நிலை) எண்.417, பணியாளர் மற்றும் நிருவாக சீர்த்திருத்தத் துறை நாள்.01.12.1993
2. அரசாணை எண்.34, பணியாளர் மற்றும் நிருவாக சீர்த்திருத்தத் துறை நாள்.21.02.2002
3. அரசாணை (நிலை) எண்.65, மனிதவள மேலாண்மைத் துறை நாள்.04.07.2022.
4. அரசாணை (நிலை) எண்.74, மனிதவள மேலாண்மைத் துறை நாள்.16.08.2023
5. சென்னை உயர்நீதிமன்ற வழக்கு W.P. No.25637/2023 மற்றும் W.M.P. No.25043/2023 இடைக்கால தீர்ப்பாணை நாள்.31.08.2023.

.........

*பள்ளிக் கல்வித்துறையில் பணிபுரியும்* இளநிலை உதவியாளர் / தட்டச்சர்கள் /சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–3 ஆகியோர்களுக்கு தமிழ்நாடு அமைச்சுப்பணி விதி 13 A ன் படி **15.03.2026** நிலவரப்படி உதவியாளர் பதவி உயர்வு பெறுவதற்குத் தகுதிவாய்ந்த நபர்களின் விவரங்களை அனைத்து சார்நிலை அலுவலர்களிடமிருந்து பெற்று தேர்ந்தோர் பெயர் பட்டியல் வெளியிட்டு பார்வை 1ல் காணும் அரசாணையின் படி உதவியாளர்களாக பதவி உயர்வு/பணிமாறுதல் வழங்கப்பட வேண்டியுள்ளது.

எனவே, **15.03.2026** நிலவரப்படி உதவியாளர் பதவி உயர்வு முன்னுரிமைப்பட்டியல் தயார் செய்யும் பொருட்டு இளநிலை உதவியாளர் / தட்டச்சர்கள் / சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–3 ஆகியோர்களது உத்தேச பெயர் பட்டியல் இத்துடன் இணைத்து அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கும் அனுப்*பப்படுகிறது. இதில்* சேர்க்கை/நீக்கம்/திருத்தம் இருப்பின் உரிய அலுவலரின் சான்றுகளுடன் மாவட்ட வாரியாக தொகுத்து இவ்வியக்கக அ4 பிரிவிற்கு மின்னஞ்சல் முகவரிக்கு *16.09.2026 அன்று மாலை* 5.00*க்குள் அனுப்புமாறு* அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கும் *தெரிவிக்கப்படுகிறது.*

**மேலும்**, **15.03.2026** நிலவரப்படி உதவியாளர் பதவி உயர்வுக்கு தகுதிபெற்ற நபர்கள் <u>(2007-2013 தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி –IV மூலம் தெரிவு பெற்றவர் வரை மற்றும் கருணை அடிப்படை / பதவி உயர்வு நியமன முறை எனில் 30.04.2013 பணிவரன் முறை நாள் வரை)</u> மற்றும் 3 ஆண்டுக்கு முன்னர் பதவி உயர்வினைத் தற்காலிகமாக துறந்தவர்கள் (Relinquishment) இருப்பின் அவர்களை **15.03.2026** தேர்ந்தோர் பெயர்பட்டியலில் சேர்க்க ஏதுவாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில்

விபரங்களை பெற்று, அதன் தொகுப்புப் பட்டியலினை அனுப்பி வைக்குமாறு அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், பார்வை 3ல் காணும் அரசாணையில், இளநிலை உதவியாளர்/தட்டச்சர்/சுருக்கெழுத்துத் தட்டச்சர் நிலை III ஆகியோருக்கு உதவியாளர் பதவி உயர்வு *வழங்குவது சார்ந்து கீழ்காணுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.*

AMENDMENT

In the said Special Riles, in rule 5, for sub–rule (b) and the proviso thereto, the following sub–rule shall be substituted, namely:–

"(b) promotion to the post of Assistant and to the posts which carry the scale of pay of Assistant, shall be made from the qualified Junior assistants and typist from the combined inter –se–Seniority list of the holders in these categories recruited in the same year in the ratio 1:1".

*இதன் தொடர்ச்சியாக வெளியிடப்பட்ட,* பார்வை 4ல் காணும் அரசாணை*யின் வாயிலாக* இளநிலை உதவியாளர்*/தட்டச்சர்/*சுருக்கெழுத்துத் தட்டச்சர் நிலை III ஆகியோருக்கு உதவியாளர் பதவி உயர்வு 1 : 1 என்ற விகிதாச்சாரம் விலக்கிக் கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*இதனைத்தொடர்ந்து, பார்வை 4ல் காணும்* அரசாணைக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட *பார்வை 5ல் காணும்* வழக்கு சார்ந்து பெறப்பட்ட 31.08.2023 நாளிட்ட தீர்ப்பாணையின் வாயிலாக இவ்வரசாணைக்கு இடைக்கால தடையாணை பெறப்பட்டுள்ள*து,*

*எனவே,* பார்வை 3ல் காணும் அரசாணையின் தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில், *2013*ம் ஆண்டில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் தட்டச்சர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு உதவியாளர் பதவி உயர்வுக்கு *இதர அனைத்து தகுதிகளையும் பெற்றவர்* எவரும் *இருப்பின் அவர்களது பெயரினை* 15.03.2026 *நிலவரப்படியான முன்னுரிமைப்பட்டியலில் சேர்க்க பரிந்துரைக்கப்படவேண்டும் எனவும் எவரும் இல்லை எனில் இன்மை அறிக்கை அனுப்பப்படவேண்டும் எனவும் அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.*

*இணைப்பு* :– ஒம்/–மு.இராமசாமி

*பெயர் பட்டியல்* (*ம*) *படிவம்* *இணை இயக்குநர்* (*பணியாளர் தொகுதி*)

பெறுநர்

அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள்.

நகல் :
1.மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம் சென்னை – 6.
2.இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்ககம், பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம், சென்னை–6
3.இயக்குநர், தனியார் பள்ளிகள் இயக்ககம், பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம், சென்னை–6
4.செயலர், ஆசிரியர் தேர்வு வாரியம், பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம், சென்னை –6.
5.இயக்குநர், மாநில கல்வியியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம், சென்னை–6
6.இயக்குநர், பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்ககம், பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம், சென்னை –6
7.இவ்வலுவலக 'அ2' பிரிவு.

} தகவலுக்காகப் பணிந்தனுப்பப் படுகிறது.